**அக்குரெஸ்ஸ பிரதேச சபை - 2023**

-------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அக்குரெஸ்ஸ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அக்குரெஸ்ஸ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான தானாயம்வத்த அல்லது மிரிஸ்வத்த காணியில் அமைந்துள்ள பொதுக் கழிவறையின் மதிப்பீட்டுப் பெறுமதியாக ரூபா 1,368,000 தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,371,226 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 112,447 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 295,990 பெறுமதியான பொருட் பதிவேட்டு பண்ட தன்மையுள்ள 23 விடயங்களைச் சேர்ந்த 106 அலகுகள் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 88,400 பெறுமதியான 4 சொத்து விடயங்களைச் சேர்ந்த 6 சொத்து அலகுகள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கில் கணக்கிடு செய்யப்பட்டிருந்த 5 வாகனங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 13,343,116 தொகை குறைவாக மற்றும் 2 வாகனங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 12,126,666 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 38 அறிவித்தல் பலகைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 488,900 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனுபதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்த பின்னர் கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு விடயம் ஒன்று தொடர்பாக மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 187,607 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | 2020 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திர நிலுவை வருமானத்திற்காக நீதிமன்றத் தண்டப்பணம் என அறவிடப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் நி.பி. 371 | செயலமர்வு ஒன்றிற்காக கட்டுநிதி வரையறையை மிகைத்து சபைச் செயலாளரினால் ரூபா 300,000 இற்கான முற்பணமொன்று பெறப்பட்டிருந்தது. | செயலாளரினால் அந்த பணம் பெறப்பட்டு உரிய முறையில் செலவிடப்பட்டு கட்டுநிதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2021 செப்தெம்பர் 29 ஆந் திகதிய மற்றும் 01/2021 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | ஹேனெகம விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தக்கார சங்கம் ஒன்றிற்கு இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 4,517,033 இற்கான உடன்பாட்டுத் தொகைக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட கருமம் நிறைவேற்றப்படாமையால் C-4 தர வேறொரு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. | சபை அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது எனவும் ஒப்பந்த வேலை தனியார் ஒப்பந்தக்காரர் மூலமாக மேற்கொள்ளல் தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 9,355,475 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 925,273 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 6,551,000 | 3,971,428 | 4,160,242 | 1,952,381 | 7,451,000 | 2,425,027 | 2,235,903 | 2,141,195 |
| ii. | வாடகை | 8,900,000 | 4,931,537 | 4,078,684 | 7,649,077 | 6,850,000 | 5,488,380 | 7,603,326 | 6,796,224 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 6,198,800 | 3,327,989 | 3,327,989 | - | 2,309,250 | 1,997,218 | 1,997,218 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 26,335,300 | 17,608,700 | 18,639,261 | 41,760 | 17,729,000 | 12,738,988 | 11,925,397 | 1,072,321 |
| | மொத்தம் | 47,985,100 | 28,839,654 | 30,206,176 | 9,643,218 | 34,339,250 | 22,649,613 | 23,761,844 | 10,009,740 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1429 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 1,952,381 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,466,847 தொகைக்கான மீதிகளின் நிலுவைக் கால வரையறை 3 வருடங்களை மிகைத்திருந்தது. | 03 வருடங்களை மிகைத்திருந்த நிலுவை வீதவரி மீதியில் ரூபா 40,981 இற்கான தொகையொன்று 2024 மார்ச் 31 திகதியளவில் அறவிடப்பட்டதுடன், மீதி நிலுவைத் தொகைகளை அறவீடு செய்வதற்கு சிவப்பு அறிவித்தல் அனுப்புவதற்கும் சட்ட நடவடிக்கை செயற்பாடுகள் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 266 கடையறைகளில் 232 கடைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 168 வாடகையாளரிடம் ரூபா 6,795,959 இற்கான கடை வாடகை மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 45 | அனைத்து வாடகைதார்களுக்கும் அறிவிக்கப்பட்டது எனவும் நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டிய வாடகையாளர்களுக்கு எதிராக தற்போது வழக்குத் | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகையாளர்களிடம் ரூபா 5,356,778 இற்கான மீதிகளின் நிலுவைக் காலவரையறை 03 வருடங்களை மிகைத்திருந்தது. | தாக்கல் செய்யப்பட்டுள்ளது என. | |
| (இ) | சபைக்கு சொந்தமான 25 கடையறைகள் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | வாடகையாளர்களுக்க எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது எனவும் அதே போல் உடன்படிக்கை மேற்கொள்ள விரும்பம் தெரிவிக்காத கடையறைகளை சபைக்கு உரித்தாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | சுற்றறிக்கைகு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபபா/பபாகொ/2010/01 திகதிய 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கையின் பந்தி 4 இற்கு இணங்க 18 கடையறைகளில் இருந்து ரூபா 929,554 இற்கான ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் 5 ஆவது பந்தியின் பிரகாரம் சபைக்கு சொந்தமான 02 வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் 133 கடையறைகளின் வாடகை உடன்படிக்கை 2 வருடங்களுக்கும் 32 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலவீச்சு முதல் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்திக்கு இணங்க உலகச் சந்தை கடையறை தொகுதியில் 99 கடையறைகளின் வாடகை பெறுமதி மதிப்பீடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன் அந்த சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக 14 கடையறைகள் வேறு தரப்பினருக்கு துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | மீதியான ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை இணக்கச் சபை ஊடாக செலுத்துவதற்கு விரும்பம் தெரிவித்துள்ளது எனவும் மற்றும் முறைப் பிரகாரம் கடையறைகள் நிர்மாணித்து வாடகைக்கு கொடுப்பதற்கு சபை கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அதே போல் கடையறைகளில் பெறுமதி மதிப்பீடு பெற்றுக் கொள்வதற்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் துணை வாடகை வழங்குவதை பரிசோதனை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்து அதன்படி தொடர்நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கைகு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | 02 வர்த்தக கட்டிடத் தொகுதிகள் 43 கடையறைகள் பராமரிக்கப்படாமையால் மூடப்பட்டிருந்ததுடன் அந்த கடையறைகளில் இருந்து ரூபா 3,843,749 இற்கான வாடகைத் தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | பொது சந்தையை கவர்சிகரமாக திருத்தங்கள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அவ் விடயம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மூடப்பட்டுள்ள கடையறைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,956,726 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 34,647,002 தொகை காணப்பட்டது. | பிரதான செயலகத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 9,000,000 தொகைக்கான 02 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஏற்பாடுகளை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கு விண்ணபிக்கப்பட்டுள்ளதுடன் அந்த செயற்திட்டத்திற்காக மற்றும் 2024 ஆண்டிற்காக இணக்கம் கிடைத்துள்ளது என. | அந்த செயற்திட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த உக்காத குப்பை மீள்சுழற்சி கட்டிடத்தை பரிசோதனை செய்த போது அந்த உக்காத குப்பை மீள்சுழற்சிக்காக ஆக்கபூர்வமான விதத்தில் பயன்படுத்தி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் சேகரிக்கப்பட்டிருந்த பொலிதீன், பிளாஸ்டிக் உட்பட உக்காத குப்பைகளை மிகவும் முறைசாரா விதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | சபை நிதியத்திலிருந்து ஒரே தடவையில் பாரிய ஏற்பாட்டுத் தொகையொன்று ஒதுக்க முடியாததுடன் கட்டம் கட்டமாக அந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது என. | முறையான குப்பை நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உலக சந்தை கடையறைத் தொகுதி வளாகத்தில் 07 கடையறைகள் அங்கீகாரமின்றி நிர்மணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த 3 | கடையறைகள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுரையை பெற்று தொடர்நடவடிக்கை எடுப்பதற்கு சபையினால் | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை மற்றும் கடையறைகளை ஆக்கபூர்வமான பயன்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| கடையறைகள் வேறு தரப்பினருக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அதே போல் இந்த கட்டிடத் தொகுதியின் சில கடையறைகள் வரைபுகளை மாற்றம் செய்து நுகர்வோரை கவராத விதத்தில் பல்வேறு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த அனேக கடையறைகள் மூடப்பட்டிருந்தது. | தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் பொதுச் சந்தையின் கடையறைகள் நுகர்வோரை கவரும் விதத்தில் வாடகையாளரின் கோறிக்கையின் படியும் தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிவுரையின் படியும் வாடகையாளர்களின் பணத்தை பயன்படுத்தி நவீன மயப்படுத்துவதற்காக கலந்துரையாடப்பட்டுள்ளது என. | தொடர்பாக சபையினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 முதல் 2020 வரையான காலப் பகுதியில் 286 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு 3 வருடங்களுக்கும் 7 இற்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ் அவற்றில் 32 கட்டிடங்களுக்கு மாத்திரம் பெறப்பட்டிருந்தது. அது அங்கீகரிக்கப்பட்ட கட்டிட எண்ணிக்கையில் 11 சதவீதமாகும். | அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொண்ட அனைத்து கட்டிட வரைபுகளையும் பரிசோதனை மேற்கொண்டு தேவையான ஆலோசனை அந்த உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 02 சந்தர்ப்பங்களில் சபைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 201,800 இற்கான பண்டங்கள் இருப்புப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்படும் அனைத்துப் பண்டங்களும் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்து வினியோகிப்பதற்கு களஞ்சிய உத்தியோகத்தர் மற்றும் அனைத்து விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்தப்பட்டது என. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மாநாடு ஒன்றிற்கு செல்வதற்காக அக்குரஸ்ஸ பிரதேச சபையின் உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது ரூபா 215,900 தொகை வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | தென் மாகாண ஆளுன செயலாளர் மற்றும் தென் மாகாண பிரதான செயலாளரின் கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டிருந்த அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த களஞ்சிய கணக்கு | இந்த மீதிகளின் பெறுமதி களஞ்சியப் பொழிப்பின் மூலம் | விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொழிப்பில் அடங்கியுள்ள ரூபா 25,593,658 தொகை பெறுமதியான 11 களஞ்சிய இருப்பு மீதிகள் பல வருட காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படுவதுடன் அந்த மீதிகளுக்காக சபையில் பௌதீக ரீதியாக இருப்பொன்று காணப்படவில்லை. | மாத்திரம் கணக்குகள் தயாரிப்பதற்காக தொடர்ச்சியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த களஞ்சியத்தில் இது தொடர்பாக எதுவித ஆவணங்களும் இதுவரை பேணப்பட்டது என கண்டறியப்படவில்லை என. | |

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான எல்லவெல விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பதற்காக 4184 கனமீற்றர்கள் மண் வெட்டப்பட்டு அந்த வெட்டப்பட்ட மண்ணை 100 மீற்றர்கள் உட்படக் கூடியவாறு விளையாட்டு மைதானத்திற்கு அண்மையில் பரப்புவதற்காக தென் மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தினால் 2021 ஆண்டின் இரண்டாவது அரையாண்டிற்கான EW-10 கீழ் அறிமுகப்படுத்தியிருந்த கட்டிட விலைகளின் படி (BSR) ரூபா 126 இற்கான ரேட்டை பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் மண்வெட்டப்பட்டு 1 கிலோமீற்றர் தூரத்திற்கு போக்குவரத்து செய்வதற்காக EW-10a கீழ் அறிமுகப்பத்தியிருந்த கட்டிட விலைகளின் படி (BSR) ரூபா 239 இற்கான ரேட்டை பயன்படுத்தி ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்திருந்தமையால் மண் கனமீற்றர் ஒன்றிற்கு ரூபா 113 வீதம் ரூபா 472,792 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மண் மேட்டிலிருந்து வெட்டப்பட்ட மண்ணின் எண்ணிக்கை சுமார் $4447.98m^3$ ஆகக் காணப்பட்டதுடன், அலகு $4184m^3$ தொகைக்கு மாத்திரமே கொடுப்பனவு செய்யப்பட்டது. இங்கு மிகையான மண் எண்ணிக்கையாகிய $263.98m^3$ தொகையினை விளையாட்டுத் திடலின் சரிவான இடங்களை நிரப்புவதற்காக பயன்படுத்தப்பட்டது எனவும் மதிப்பீட்டிற்கு இணங்க கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள மண்ணின் எண்ணிக்கை உடன்படிக்கை செய்யப்பட்ட சங்கத்தினால் விளையாட்டுத் திடலில் இருந்து அகற்றப்பட்டுள்ளது எனவும் விளையாட்டு மைதானத்தின் $4184m^3$ மண் எண்ணிக்கை பரப்புவதற்கு முடியாமையால் அந்த தொகையினை நிலப்பரப்பில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | சரியான ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | விலேஹேன யாக்கபெத்த துணைப் பாதை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 291,696 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பெட்டி மதகின் வேலைகள் 2020 திசெம்பர் 28 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 3 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அந்த மதகினை பயன்படுத்தக் கூடியவாறு செப்பனிட்டு | 03 பாதைகளை ஒன்றிணைக்கக் கூடியவாறு பொது மக்களின் வேண்டுகோளுக்காக மதகு நிர்மாணிக்கப்பட்ட போதிலும் ஒரு பக்கத்தில் காணப்படும் அரச அனுமதிப்பத்திரக் காணி ஒன்றின் உரிமையாளரினால் பாதையை விரிவாக்குவதற்கு இணங்காமை மற்றும் பாதையின் அபிவிருத்திக்கு | செயற்திட்டங்களை ஆக்கபூர்வமாக செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தற்போது காணப்படும் பாதைக்கு தொடர்புபடுத்தக் கூடிய விதமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான காணியின் அளவினை ஒதுக்கித் தரும்படி பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது என. | |
| (இ) | ஹேனேகம பொது விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 4,342,061 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் 4 வேலை விடயங்களுக்காக உரிய ரேட்கள் மற்றும் மண்ணின் சரியாக கணிக்கப்படாமையால் ரூபா 1,800,403 தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிர்மாண வேலையில் மண் அடுக்குதல் மேற்கொள்ளப்படாததுடன், மண்ணின் அளவு கணிக்கப்பட்டது மண்ணை பரப்பிய பின்னர் அதன் மட்டத்தின் படியே ஆகும். நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் போது மண் வெட்டப்படும் இடத்திலிருந்து சுமார் 100m தூரத்தில் வேலைத்தளம் அமைந்திருந்தமையால் வெட்டப்பட்ட மண்ணின் அளவு இலகுவான மண்ணாக காணப்பட்டமையால் அந்த மண்ணை வேலைத் தளத்திற்கு எடுத்துச் சென்று பரப்புதல் மேற்கொள்ளப்பட்டமையால் மொத்த மண்ணின் எண்ணிக்கையும் வேலைத்தளத்தில் பயன்படுத்தப்பட்டமையால் மிகைக் கொடுப்பனவொன்று நேரிட்டிருக்கவில்லை என. | உரிய ரேட்களின் படி கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | பரதுவ குப்பை மீள்சுழற்சி நிலையம் நிலையத்தில் உக்காத குப்பைகளை சேகரிக்கும் கட்டிடத்தின் மீதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக தடுத்து வைத்தல் பணத்தை தடுத்து வைத்து ஒப்பந்தக்கார சங்கத்திற்கு ரூபா 1,652,228 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைப் பகுதிகளுக்காக ரூபா 52,567 தொகையும் உரிய நியமத்தில் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிகளுக்காக ரூபா 165,757 தொகையும் மற்றும் உரிய ரேட்கள் பயன்படுத்தப்படாத காரணத்தினால் ரூபா 9,761 தொகையும் என கூட்டுத்தொகை ரூபா 228,085 இற்கான தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | நிர்மாண வேலையின் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை எனவும் உரிய நியமங்களின் படி நிர்மாணவேலைகள் மேற்கொள்ளப்பட்டது எனவும் மற்றும் உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட்டது என. | உரிய ரேட்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளின் படி கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சபைக்கு சொந்தமான தகனகூடத்திற்கான நுழைபாதை அபிவிருத்தி வேலைகளுக்காக ரூபா 1,992,735 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், காலப்பகுதிக்குரிய ரேட்கள் பயன்படுத்தாமையினால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 221,719 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த அனைத்து வேலைப் பகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் பூர்த்தி செய்யப்பட்டதென கணித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கும் போது காணப்பட்ட விலைகளின் படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டது எனவும் சங்கத்துக்கு மிகையாக செலுத்தியிருந்த தொகையை தடுத்து வைத்தல் பணத்திலிருந்து அறவீடு செய்யப்படும் என. | உரிய ரேட்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளின் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அக்குரஸ்ஸ பிரதேச சபையில் சேவையாற்றும் ஆரம்ப தர 09 ஊழியருக்கு பதவிக்குரிய கடமைகள் சாட்டப்படாமல் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், அதன் படி மீளாய்வாண்டின் போது ரூபா 4,175,841 இற்கான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | போதியளவு எண்ணிக்கையான ஊழியர்கள் காணப்படாமையால் இவ்வாறு சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டது. | பதவிக்குரிய கடமைசாட்டுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |